## 100 நாள் வேலைத்திட்டத்தை அழிக்கத் துடிக்கும் நாசகார ஒன்றிய பா.ஜ.க. அரசு –

# ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்து கூட்டணிக் கட்சியினர் கடலெனத் திரண்ட காட்சி!



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி நூறு நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் வகையில் சட்டம் கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும் கள்ளிக்குடியில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக நிர்வாகிகள், கழகத்தினர், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.



முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி ஒன்றியம், மூலக்கரைப்பட்டி பேருந்து நிலையம் அருகில் 100 நாள் வேலை இனி இல்லை ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க. வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. உடன் நாங்குநேரி மேற்கு ஒன்றியச் செயலாளர் சுடலைகண்ணு, மூலைக்கரைப்பட்டி பேரூர்ச் செயலாளர் முருகையா, நாங்குநேரி பேரூர் செயலாளர் வானுவாமலை, ம.தி.மு.க. ரைமண்ட், கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் எம்.எல்.ஏ. கிருஷ்ணன், கோடைக்கரப்பட்டி பேரூராட்சி தலைவர் பார்வதி,காங்கிரஸ் கட்சி முத்துக்கிருஷ்ணன், ஆதிபாண்டி,கோபால கண்ணன் உள்பட மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்பட சுமார் 2000 பேர்கள் கலந்து கொண்டனர்.




தென்காசி தெற்கு மாவட்டம், குத்துக்கல்வலசையில் அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்கி 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில் ஒன்றியச் செயலாளர் அழகு சுந்தரம், பழனி நாடார் எம்.எல்.ஏ., நகரச் செயலாளர் சாதிர், ம.தி.மு.க. செல்வம், முஸ்லிம் லீக் அப்துல் அஜீஸ், ம.ம.க. நைனார் முகமது,கம்யூனிஸ்ட் கட்சி பாஸ்கரன், வி.சி.க.செல்வம், ஆதி தமிழர் பேரவை கலிவருணன், திராவிட தமிழர் கட்சி கரு வீரபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் கழக நிர்வாகிகள் வெங்கடேசன், கணேசன், சுடலை, குட்டி, முத்தையா, மூப்பன் ஹபீபுர் ரகுமான் மற்றும் கழகத்தினர், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.




தேனி தெற்கு மாவட்டம், ஆண்டிபட்டி ஒன்றியம் அலுவலகம் அருகே 100 நாள் வேலை இனி இல்லை அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், ஜால்ரா அடிக்கும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மகாராஜன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. உடன் மாநில தேர்தல் பணிக்குழுச் செயலாளர் கம்பம் செல்வேந்திரன், கிழக்கு ஒன்றியச் செயலாளர் ராஜாராம் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் இணைந்து நடைபெற்றது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




தேனி தெற்கு மாவட்டம், ஆண்டிபட்டி தொகுதி மயிலாடும்பாறை கிராமத்தில் பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டு சதியால் 100 நாள் வேலை இனி இல்லை என்ற ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தி.மு.க. மாநில தீர்மானக் குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார் தலைமை தாங்கி பேசினார். இதில் கடமலை மயிலை தி.மு.க. ஒன்றியச் செயலாளர்கள் வக்கீல் சுப்பிரமணி, தங்கப்பாண்டி மற்றும் தி.மு.க. கூட்டணிக் கட்சி கழக உறுப்பினர்கள், நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்டம், வள்ளியூர் காமராசர் சிலை முன்பு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கு உலை வைக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க.அரசையும், துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் வழிகாட்டுதலின்படி முன்னாள் எம்.பி. தலைமைச் செயற்குழு உறுப்பினர் சா.ஞானதிரவியம் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட துணைச் செயலாளர் நம்பி, ஒன்றியச் செயலாளர்கள் ராஜா ஞானதிரவியம், அலெக்ஸ் அப்பாவு, பணகுடி பேரூர்ச் செயலாளர் தமிழ்வாணன், காங்கிரஸ் கட்சி அருள் தாஸ், இந்திய கம்யூனிஸ்ட் சந்தானமுத்து, வி.ச.க.கிருஷ்ணன், கழக நிர்வாகிகள் மாடசாமி, மல்லிகா அருள், அன்பரசு, மணிவர்ண பெருமாள், கருணாநிதி ஆகியோர் உட்பட கழகத்தினர், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.




தி.மு.க. மாவட்டச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் ஆலோசனையின் படி போகலூர் ஒன்றியத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு, அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு எம்.எல்.ஏ. முருகேசன் தலைமை தாங்கினார். போகலூர் ஒன்றியச் செயலாளர்கள் குணசேகரன், கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி மாநில, மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் 100 நாள் வேலை திட்ட பயனாளிகள் உட்பட ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டையில் மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிய ‘100 நாள் வேலை இல்லை ‘ என்ற ஒன்றிய அரசின் அறிவிப்பை எதிர்த்தும் துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும் முன்னாள் சேர்மன் சுப்பாராஜ் தலைமையில் நகரச் செயலாளர் ஏ.கே.மணி, மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் பாபுஜி, நெசவாளர் அணி பழனிச்சாமி, மாவட்ட தலைமைச் செயற்குழு சாகுல் ஹமீது, ஒன்றியச் செயலாளர் பாலகணேஷ், பொன்ராஜ் மற்றும் மதசார்பற்ற அனைத்து கட்சிகளும் கலந்துகொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.